STATEMENT OF THE FIRST PETITIONER

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : காஞ்சனா | Father/Husband Name : தட்சாணாமூர்த்தி |
| Age : 29 | Village : கல்லமநாயக்கன்பட்டி |
| Taluk : | Calling : இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6 Mar 2026 10:58

**நீதிமன்ற விசாரணை** :-

நான் என்னுடைய கணவர் மற்றும் அவர்களின் உறவினர்கள் மீது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். இன்று நீதிமன்ற விசாரணைக்கு என்னுடைய கணவர், மாமனார் மற்றும் கணவரின் சகோதரர் ஆஜரானார்கள். நீதிமன்றத்தில் பேசப்பட்ட சமரசத்தின்போது என்னுடைய கணவர் அவரிடமிருக்கும் நாங்கள் அவருக்கு வழங்கிய சுமார் 2 பவுன் செயின் மற்றும் ½ பவுன் மோதிரம், பண்டபாத்திரங்கள் மற்றும் ஆடைகள், எங்களுக்கு குழந்தை பிறப்பிற்காக செலவு செய்த பணம் ரூ.1,00,000/- தருவதாக கூறினார். மேலும், என்னுடைய வாழ்க்கை பொருளுதவிக்காக மாதம் ரூ.4,000/- தருவதாகவும் கூறினார். அந்த சமரச முடிவை நான் ஏற்றுக்கொண்டு வழக்கை முடித்து வைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். எனக்கு தரவேண்டி பணம் ரூ.1,00,000/-த்தை என்னுடைய கணவர் இன்றிலிருந்து 3 மாதங்களில் தருவதாக கூறினார். அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். என்னுடைய கணவருக்கு வழங்கிய செயின் மற்றும் மோதிரம், பண்டபாத்திரங்கள், ஆடைகளை என்னுடைய கணவர் வரும் ஞாயிற்றுக்கிழமை அவருடைய வீட்டிற்கு வந்து எடுத்து செல்லும்படி கூறினார். அவ்வாறே நான் அதை சென்று பெற்றுக்கொள்கிறேன். என்னுடைய கணவர் எனக்கு தருவதாக கூறிய மாத வாழ்க்கை பொருளுதவி தொகை ரூ.4,000/-த்தை என்னுடைய வங்கி கணக்கில் நேரடியாக ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்த உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன். எங்களுடைய திருமண உறவு தொடர்பான பிரச்சனையை நாங்கள் உரிய நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.2, Sattur.

STATEMENT OF THE FIRST RESTPONDENT

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.2 COURT, SATTUR

| | |
|---|---|
| Name : தட்சணாமூர்த்தி | Father/Husband Name : மோகன் |
| Age : 34 | Village : மதுரை |
| Taluk : | Calling : பேராசிரியர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 6 Mar 2026 11:08

<u>நீதிமன்ற விசாரணை</u> :-

என்னுடைய மனைவி என்மீதும், என்னுடைய குடும்ப உறுப்பினர்கள் மீதும் குடும்ப வன்முறையிலிருந்து பெண்களை பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இன்று வழக்கு விசாரணைக்கு நான், என்னுடைய தந்தை மற்றும் சகோதரர் முன்னிலையானோம். நான் தற்போது தனியார் கல்லூரியில் பேராசிரியராக வேலை செய்கிறேன். எனக்கு மாத சம்பளம் ரூ.26,268/- ஆகும். இன்று நீதிமன்றத்தில் நடைபெற்ற சமரசத்தின் முடிவில் நான் எனக்கு எங்களுடைய திருமணத்தின்போது என்னுடைய மனைவி தரப்பில் அணிவிக்கப்பட்ட சுமார் 2 பவுன் செயின் மற்றும் ½ பவுன் மோதிரம், மற்றும் பண்டபாத்திரங்கள் மற்றும் ஆடைகள், எங்களுக்கு குழந்தை பிறப்பிற்காக செலவு செய்த பணம் ரூ.1,00,000/- ஆகியவற்றை திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறேன். மேலும், என்னுடைய மனைவியின் வாழ்க்கை பொருளுதவிக்காக மாதம் ரூ.4,000/- அவர் மறுமணம் செய்துகொள்ளும் வரை கொடுப்பதாக ஒப்புக்கொள்கிறேன். அந்த சமரச முடிவு என்னுடைய மனைவி இன்று நீதிமன்றத்தில் வைத்த கோரிக்கையின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும். அந்த சமரச முடிவை என்னுடைய மனைவியும் ஏற்றுக்கொண்டார். நான் என்னுடைய மனைவிக்கு கொடுக்கவேண்டிய பணம் ரூ.1,00,000/-த்தை இன்றிலிருந்து 3 மாதங்களில் என்னுடைய மனைவிக்கு அவரது வங்கி கணக்கு மூலமாக செலுத்திவிடுகிறேன். எனக்கு திருமணத்தின் போது வழங்கிய செயின் மற்றும் மோதிரம், பண்டபாத்திரங்கள், ஆடைகள் ஆகியவற்றை வரும் ஞாயிற்றுக்கிழமை என்னுடைய மனைவி எங்களுடைய வீட்டிற்கு வந்து எடுத்து செல்ல நான் அனுமதிக்கிறேன். நான் என்னுடைய மனைவிக்கு தருவதாக கூறிய மாத வாழ்க்கை பொருளுதவி தொகை ரூ.4,000/-த்தை என்னுடைய மனைவியின் வங்கி கணக்கில் நேரடியாக ஒவ்வொரு மாதமும் 5ம் தேதிக்குள் செலுத்த சம்மதிக்கிறேன். எங்களுடைய திருமண உறவு தொடர்பான பிரச்சனையை நாங்கள் உரிய நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம். என்னுடைய மனைவி தற்போது வேலைக்கு செல்லவில்லை, ஒருவேளை அவர் வேலைக்கு சென்றாலும் அவருக்கு மறுமணம் ஆகும் வரை நான் வாழ்க்கை பொருளுதவியை கொடுப்பேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

Judicial Magistrate No.2, Sattur.